16th March 1965]

கிறது. லா காலேஜில் 14 பேர்களுக்குக் கொடுத்து வந்தோம். இப்பொழுது அது 40 ஆகியிருக்கிறது. மாணவர்களுக்கு எத்தகைய ஒத்தாசை செய்ய வேண்டுமோ அவையெல்லாம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : இந்த ஸ்காலர்ஷிப் பெற்றுப் படித்த மாணவர்கள் படித்துவிட்டுச் சென்று மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் பெற்ற ஸ்காலர்ஷிப் பணத்தைத் திரும்பக் கட்டவேண்டுமென்ற நியதி ஏற்படுத்தப்படுகிறது. எனவே இதுபோன்ற சிக்கலான நிலையைத் தவிர்ப்பதற்கு அவர்கள் அப்ளை செய்யும்பொழுதே அவர்கள் தகுதியுள்ளவர்களா, அல்லது தகுதியற்றவர்களா என்பதைப் பரிசீலனை செய்த பின் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : முதலிலே அவர்கள் தகுதியுள்ளவர்களா, இல்லையா என்பதைப் பார்த்துத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் சில மாணவர்கள் தங்களுடைய உண்மையான நிலையைச் சொல்வதில்லை. அவர்கள் பணக்காரர்களாக இருந்தாலும்கூட ஏழைகள் என்று அப்ளை செய்கிறார்கள். பின்பு அவர்களுடைய உறவினர் அல்லது தெரிந்தவர்கள் யாராவது பெட்டிஷன் போட்டால் அதன்மேல் நடவடிக்கை எடுக்கும் பொழுது அவர்கள் பணக்காரர்கள் என்று தெரிந்தால் அவர்கள் பெற்ற பணத்தைத் திரும்பக் கொடுத்துவிடவேண்டும் என்று சொல்கிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : 50 சதவீதம் மார்க்குகளுக்கு குறைந்த மார்க்குகள் பெற்ற மாணவர்களுக்குச் சிபாரிசு இருந்தால்தான் உபகாரச் சம்பளம் கொடுக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. வெல்ஃபேர் ஆபீஸர் ஓரளவு அவர் உசிதம்போல் கொடுக்கலாம் என்று ஒரு தொகை ஒதுக்கப்படுகிறது. அந்தத் தொகையை, கொடுக்கப்படுகிற முழுத் தொகையில், பாதி அல்லது 75 சதவீதம் என்ற அளவுக்குக் கொடுக்க அவருக்கு அரசாங்கம் அதிகாரங்கள் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அவருக்கு அந்த அதிகாரத்தை இப்பொழுது கொடுக்கமுடியாது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : உபகாரச் சம்பளங்கள் குறைந்த அளவுக்குத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை ஏற்றுவதற்கு அரசாங்கத்திற்கு அபிப்பிராயம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்காரைப் பொறுத்தமட்டிலும் கொடுப்பதைக் கொடுத்து வருகிறார்கள். மாநில சர்க்காரும் அதிகமாகத் தான் கொடுத்து வருகிறது.

Building for State Forensic Science Laboratory

* 249 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to house the State Forensic Science Laboratory in a new building; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) சென்னை மெரினாவில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகத்திற்குப் பக்கத்தில் போரன்சிக் சைன்ஸ் மாநில ஆய்வுக் கூடத்திற்கென (சிமிட்டி கான்கிரீட் அஸ்திவாரம் போடுவது உட்பட) மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக 10.70 லட்சம் ரூபாய்க்குப் புதிய வரைப் படங்களையும் மதிப்பீடுகளையும் அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இது கட்டிப் பூர்த்தியானதும் நகரில் வெவ்வேறு மூன்று இடங்களில் இப்போது பணியாற்றிவரும் மேற்படி ஆய்வுக் கூடத்தின் 3 பிரிவுகளும் அக்கட்டிடத்திற்கு மாற்றப்படும்.